செ.வெ.எண்: 70 நாள்: 29.09.2016

**<u>புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ளாட்சி தேர்தல் தொடர்பான பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.</u>**

----

புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெறவுள்ள உள்ளாட்சி தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் வேட்பு மனு தாக்கல் செய்யும் இடங்களை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (29.09.2016) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறியதாவது:

தமிழகத்தில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் தேதியினை தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இதன்படி நமது மாவட்டத்தில் உள்ளாட்சி சாதாரண தேர்தல்கள் 17.10.2016 மற்றும் 19.10.2016 ஆகிய தேதிகளில் இரண்டு கட்டங்களாக நடைபெறவுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் வேட்பு மனு தாக்கல் 26.09.2016 அன்று முதல் நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊரகப் பகுதிகளில் நடைபெற்று வருகின்றது.

இதில் பொன்னமராவதி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள வேட்புமனு தாக்கல் பெறப்படும் இடங்கள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. மேலும் பொன்னமராவதி வலம்புரி வடுகநாதன் மேல்நிலைப்பள்ளியில் அமைக்கப்படவுள்ள வாக்கு எண்ணும் மையம் மற்றும் பொன்னமராவதி பேரூராட்சி பொன்.புதுப்பட்டி அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளியில் அமைக்கப்படவுள்ள வாக்குப்பதிவு மையங்களையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வில் வேட்பாளர்களிடமிருந்து பெறப்படும் வேட்பு மனுக்களை முறையாக பூர்த்தி செய்யப்பட்டவை தானா என்பதை சரிபார்த்து வாங்கவும், வாக்கு எண்ணும் மையங்களில் கதவு மற்றும் ஜன்னல்களை சீரமைத்து புதுப்பிக்கவும், வாக்குச்சாவடிகளில் குடிநீர் வசதி, கழிவறை வசதி, மின்விளக்கு வசதி போன்ற பல்வேறு அடிப்படை வசதிகளை சிறப்பாக மேற்கொள்ளவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொன்னமராவதி அருகில் புதிதாக கட்டப்பட்ட வட்டாட்சியர் அலுவலகத்தை பார்வையிட்டார். மேலும் கொப்பனாப்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் பல்வேறு சிகிச்சைகள் குறித்து கேட்டறிந்து ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலஅலுவலர் திரு.அன்பழகன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.பாஸ்கர், திரு.சதாசிவம் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**